# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 30 திங்கட்கிழமை 30.12.2024 கதிர் 81







## 8000 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, டிச. 30

போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 8 ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது

பண்டிகை காலத்தில் வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளும்நோக்கில்பொலிஸாரால் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 8068 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# மஹிந்தவைப் பாதுகாப்பது எமது இனத்தின் கடமை!

## சுமண ரத்ன தேரர் அறிவுரை-



**(கொழும்பு, டிச. 30)**

**மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று எவராலும் கூற முடியாது. எனவே, மஹிந்தவைப் பாதுகாக்க வேண்டியது எமது இனத்தின் கடப்பாடாகும் என்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் ,வ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், "மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில்-தான் நந்திக் கடலில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர்கொண்ட அழுத்தங்கள் ஏராளம்.

போர் இவ்வாறு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தச் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்கூட ,தன் ஓர் அங்கம்தான்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டதால் மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று எவராலும் கூற முடியாது. எனவே, மஹிந்தவைப் பாதுகாக்க வேண்டியது எமது இனத்தின்கடப்பாடாகும்.

76 ஆண்டு கால சாபத்துக்கு முடிவு கட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக கினார்கள்.

7➤

## கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவால் சர்ச்சை

கொழும்பு, டிச. 30

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் பிரபலமாகிய நாமல் குமார, கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்சித் குறித்து சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

தேசிய கத்தோலிக்க தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த சமூக ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் (சிஐடி) முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் டெய்லி மிரர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்தவை வினவிய போது, கர்தினாலிடம் ஊஜனு வாக்குமூலம் பதிவு செய்ததாக அவர் உறுதிப்படுத்தினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வசம் உள்ள ஒரு ஒலிப்பதிவு கார்டினல் ரஞ்சித்தின் நடத்தை குறித்து விமர்சிப்பதாக நாமல் குமார கடந்த வாரம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "எனது இச் செயற்பாடு கர்தினாலைப் பாதுகாப்பதே தவிர, அவர் மீது சேறு பூசுவது அல்ல," என்று அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், டெய்லி மிரர் ராமநாயக்கவைத் தொடர்பு கொண்டபோது, கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் தன்னிடம் இல்லை என்று கூறினார். "கர்தினால் ரஞ்சித்தின் நடத்தை பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் என்னிடம் இல்லை. சில நபர்கள் செயற்கை நுண்ணறிவைப் (யுஐ) பயன்படுத்தி என் உட்பட சிலர் மீது சேறு பூசுவதற்கு அவ்வாறு போலியான ஒன்றை உருவாக்கி இருக்கலாம்," என்று அவர் கூறினார்.

"நான் நாமல் குமாரவை ஒருபோதும் சந்தித்ததில்லை, யாருக்கும் ஒலிப்பதிவு

7➤

## ஆபத்தில் இருந்து மீட்கத் தயார்

கொழும்பு, டிச. 30

இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் அதிலிருந்து மீட்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க ஆயத்தமாக இருக்கின்றார் என முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அனுபவம் இல்லாதவர்களிடம் நாட்டை ஒப்படைக்க, மக்கள் எடுத்த தீர்மானத்தினால் இன்று அவர்கள் பெரும் நெருக்கடி நிலைமையை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் தீர்வு வழங்கப்பட முடியாது காணப்படும் அரசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டு பிரச்சினைகள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் இருந்தபோது இருக்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த காலத்தில் அரிசிக்கான தட்டுப்பாடு இருக்கவில்லை எனவும் இலவசமாக மக்களுக்கு 20 கிலோ கிராம் எடையினுடைய அரிசி விநியோகம் செய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பல

7➤

## நிலமே பதவிகள் இனி ஒரே பரம்பரைக்கு மட்டுப்படுத்தப்படக்கூடாது"



கொழும்பு, டிச. 30

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் தொழில் வல்லுநர்களுக்கு பாராளுமன்ற அணுகல் பொதுவானதாக இருப்பது போல், இலங்கையின் பௌத்த ஆலய அமைப்பில் திவடன நிலமே மற்றும் பஸ்நாயக்க நிலமே பதவிகளும் எந்தவொரு குடிமகனுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என ஜாதிக பரிபோகிக பெரமுன (ஜேபிபி) தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

7➤

## 'கிளப்'இல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் ஹரின்

கொழும்பு, டிச. 30

முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் கொழும்பில் உள்ள CH & FC கிளப்பில் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

சம்பவ இடத்திலிருந்து வெளியேறும் ஹரின் கத்திக் கூச்சலிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சம்பவ இடத்திலிருந்தவர்கள் தெரிவித்தனர். அவரது குறித்த செயற்பாட்டால் கிளப்பில்

7➤

## புதிய இராணுவ, கடற்படைத் தளபதிகள் நியமனம்



கொழும்பு, டிச. 30

இலங்கை இராணுவம் மற்றும் கடற்படைக்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும் வகையில் புதிய தளபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவும், புதிய கடற்படைத் தளபதியாக

7➤

# சட்டவிரோத பனைமரம் தறிப்பு



யாழ்ப்பாணம், டிச. 30

யாழ்ப்பாணத்தில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீது நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருபாலை மற்றும் நீர்வேலிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பனை மரங்களை வெட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கையின் பிரகாரம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வாரம் தனங்கிளப்புப் பகுதியில் சட்டவிரோதமாக பனை மரங்களை வெட்டியவர்கள் மீதும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

விடுமுறைநாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இவ்வாறு சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்படுவதாகவும் தெரிவித்த அவர், பனை வளங்களை பாதுகாக்கும் நோக்கில் தாம் விரைந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மக்கள்தமது தேவைகளுக்கு பனை மரங்களை வெட்டுவதற்கு பொருத்தமான பனை மரங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு கூடிய திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளதுடன் எந்தப் பகுதியிலாவது பனை மரங்கள் வெட்டுவதை அறிந்தால் மக்கள் உடனடியாக 0779273042 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# பல திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன

கொழும்பு, டிச. 30

இடைநிறுத்தப்பட்ட பல சர்வதேச மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்கள்புதிய அரசாங்கத்தின்மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஜயதிஸ்ஸ இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகளைக் கொண்டுவருவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், வளமான ஆரம்பம் ஒன்றை அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் இலங்கை எதிர்பார்க்க முடியும்எனவும் மேலும் தெரிவித்தார்.

“வெளிநாட்டு இராஜதந்திரிகள் மீண்டும்நம்பிக்கையைப்பெற்றுள்ளதுடன் இலங்கையுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கியுள்ளனர்,” என்று அவர் கூறினார்.

குறுகிய காலத்தில் பங்குச் சந்தை சிறப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளதாக அமைச்சர் ஜயதிஸ்ஸ மேலும் சுட்டிக்காட்டினார்.

ஸ்திரத்தன்மையை நோக்கிய பாதையில் இலங்கை நகர்கிறது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றார்.

அரசாங்கம் பதவியேற்று 03 மாதங்களுக்குள் நாட்டை ஸ்திரப்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மஹிந்த திடீர் விஜயம்

கொழும்பு, டிச. 30

மறைந்த இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் அஞ்சலி செலுத்தினார்

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில், மன்மோகன் சிங்கிற்கான இரங்கல் புத்தகத்தில் தனது இரங்கலை பதிவு செய்தார். (ஐ)



# மின்சாரம் தாக்கி மூன்று இளைஞர்கள் உயிரிழப்பு



புத்தளம், டிச. 30

புத்தளம் மாம்புரி பகுதியில் மின்சாரம் தாக்கியதில், 3 பேர் மரணமடைந்துள்ள சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயர சம்பவம் ஞாயிற்றுக்கிழமை, கல்பிட்டி வீதி, மாம்புரி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கட்டிடம் ஒன்றிற்கு கொங்ரீட் போடுவதற்கு ஆயத்தங்கள் செய்வதற்காக வேலை செய்துகொண்டிருந்த மூன்று இளைஞர்களே, மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் புத்தளம் சோல்ட்டன் பகுதியைச் சேர்ந்த இருவரும், மதீனா நகரைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# காட்டு யானைகளுக்கெதிராக போராட்டம்



கொழும்பு, டிச. 30

காட்டு யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரி அனுராதபுரம் தந்திரிமலை வீதி ஓயாமடுவ பகுதியில் வைத்து மக்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யானைக்கூட்டம் ஒன்று அப்பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளதையடுத்து பயிர்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாக போராட்டக்காரர்கள் கூறுகின்றனர்.

குறித்த பிரதேச மக்கள் இன்று காலை 07.00 மணியளவில் வீதியை மறித்து யானைகளால் நாசப்படுத்தப்பட்ட பதாகைகள் மற்றும் பல்வேறு பயிர்களை காட்சிப்படுத்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை கலைக்க பொலிஸார் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



# மட்டக்களப்பில் சிக்கிய 16 அடி நீள முதலை

*மட்டக்களப்பு, டிச. 30*

*மட்டக்களப்பு, புளியந்தீவு வாவிக்கரை வீதி இரண்டில் சுமார் 16 அடி நீளமான முதலையொன்று நேற்றுபொதுமக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டது.*

*கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு பிரதேச ஆற்றில் தென்பட்ட இந்த முதலை கரைக்கு வந்த போதே, பொதுமக்கள் முதலையை பிடித்துள்ளனர்.*

# இலங்கை இராணுவத்தின் புதிய தளபதி


கொழும்பு, டிசெ. 30

இலங்கையின் தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே ஓய்வு பெறுவதை அடுத்து, இலங்கை இராணுவத்தின் 25ஆவது தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ பதவியேற்கவுள்ளார்.

மேஜர் ஜெனரல் ரொட்ரிகோவின் நியமனம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று பிற்பகலில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க தரப்பு செய்திகள் வெளியாகியுள்ளன.

அனுபவமிக்க இராணுவ அதிகாரியான, மேஜர் ஜெனரல் ரொட்ரிகோ முன்னர் இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாக பணியாற்றினார். அத்துடன் பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர்கள் கல்லூரியின் தளபதியாகவும் பணியாற்றினார்.

இதேவேளை, தற்போதைய இராணுவத்தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, இராணுவத் தளபதியாக தனது இரண்டாவது தவணை சேவை நீடிப்பில் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டம்!



கொழும்பு, டிசெ. 30

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 'தூய்மையான இலங்கை' வேலைத்திட்டம் எதிர்வரும் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் என். எஸ். குமாநாயக்க, பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட 18 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியொன்று அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த ஜனாதிபதி செயலணியின் பொறுப்புகள், 'தூய்மையான இலங்கை' திட்டத்தை திட்டமிடல், வழிகாட்டுதல், நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்தல் என்பனவாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பாடசாலை நாட்களின் எண்ணிக்கையில் திருத்தம்

கொழும்பு, டிசெ. 30

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு பாடசாலை நடத்தப்படும் நாட்களின் எண்ணிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச பாடசாலைகள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் வருடாந்த பாடசாலை வருகை 210 நாட்கள் என்ற தேவை 181 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிக எண்ணிக்கையிலான பொது விடுமுறை நாட்கள் இருப்பதன் காரணமாக பாடசாலைகளின் முதலாம் தவணை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் கல்வியாண்டுக்கான மூன்றாம் தவணையை நிறைவு செய்வதற்கு ஜனவரி 02 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை பாடசாலையின் முதல் மூன்று வாரங்கள் நடைபெறும்.

2025 ஆம் ஆண்டிற்கான முதலாம் தவணைக்கான பாடசாலை ஆரம்பம் ஜனவரி 27 ஆம் திகதி நடைபெறும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 2025 ஆம் ஆண்டிற்கான 26 பொது விடுமுறை நாட்களில், வார இறுதி நாட்களில் 04 விடுமுறைகள் மட்டுமே உள்ளன, ஏனைய அனைத்து பொது விடுமுறைகளும் வார நாட்களில் உள்ளன.

அதற்கமைய, 210 நாட்களுக்கு பாடசாலை செயற்பாடுகளை நடத்த முடியாது என தெரிவித்த கல்வி அமைச்சு, 2025 ஆம் ஆண்டிற்கான பாடசாலை நாட்களை 181 நாட்களாக மட்டுப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரிசிக்கு 45 வீத வரி

கொழும்பு, டிசெ. 30

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 45 வீத வரி விதிக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான் இந்த குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசியின் விலை 150 ரூபாவிற்கு குறைவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த ஒரு கிலோ அரிசிக்கு 65 ரூபாய் வரி விதிக்கப்பட்டு அதிகபட்ச சில்லறை விலையாக கிலோ ஒன்று 230 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசாங்க ஆட்சிக்காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டபோது இறக்குமதி வரி கிலோ ஒன்றுக்கு இரண்டு முதல் பத்து ரூபாவாக காணப்பட்டதாகவும் மக்களுக்கு சலுகை விலையில் அரிசி விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக அரிசி கிலோ ஒன்றுக்கு 65 ரூபாய் அல்லது 45 வீத வரி அறவீடு செய்யப்படுவது தேசிய மக்கள் சக்தியை அரசாங்கத்தின் ஆட்சியின் கீழாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழில் பொதுமக்களை அச்சுறுத்திய பேருந்து:

யாழ்ப்பாணம், டிசெ. 30

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித்தடத்தில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த தனியார் பேருந்து உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளார்.

தனியார் பேருந்து மேற்படி வழித்தடத்தில் சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பாக சமூக ஊடகங்களில் காணொளிகள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கு அமைவாக முதல்கட்டமாக குறித்த தனியார் பேருந்தின் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சாரதி, நடத்துனர் மற்றும் சிற்றூர்தியின் உரிமையாளர் மேலதிக நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களுடன் அதிகார சபைக்கு சமூகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)

# அகதிகளைச் சந்திக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு, டிசெ. 30

முல்லைத்தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளை சந்திக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மியான்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

கப்பலில் இருந்த 12 பணியாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ளவர்கள் முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்கு சென்றிருந்தனர்.

குடிவரவு கட்டுப்பாட்டு நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளை பார்வையிட அனுமதி வழங்க முடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து அகதிகளை சந்திக்க அனுமதி வழங்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் குறித்த கோரிக்கைக்கு பதிலளித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சரின் உத்தரவின் பிரகாரமே புகலிடக் கோரிக்கையாளர்களை சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்படாமல் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது. மியன்மாரில் இருந்து வருகை தந்துள்ள அகதிகளில் 40இற்கும் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு தமக்கு உள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் மூலமோ அல்லது வேறு வகையிலோ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களை தொடர்ந்தும் பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஆணைக்குழுவின் அதிகாரிகள் தடையின்றி உரிய புகலிட கோரிக்கையாளர்களை சந்திப்பதற்கு வசதியாக தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதமொன்றின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# திருட்டில் ஈடுபட்ட கும்பல் பொலிசாரினால் கைது

*கொழும்பு, டிசெ. 30*

*கொழும்பு மற்றும் அயற்பிரதேசங்களில் நீண்ட காலமாக முச்சக்கர வண்டித் திருட்டில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்று பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளது.*

*குறித்த கும்பலைச் சேர்ந்தவர்கள் முச்சக்கர வண்டிகளைத் திருடி விற்று அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் போதைப் பொருள் பயன்படுத்தும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.*

*கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேஸ் வீதி பகுதியில் கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணை பிரிவினரால் அண்மையில் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.*

*அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேற்கண்ட தகவல்கள் வெளியாகியிருந்தன.*

*அதனைத் தொடர்ந்து, குறித்த சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் மூலம் பல்வேறு பகுதிகளில் திருடப்பட்ட 9 முச்சக்கரவண்டிகளும், அதனை வைத்திருந்த மேலும் நான்கு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதான சந்தேகநபர்கள் 31, 38, 51 மற்றும் 54 வயதுடைய சீதுவ, ஒருகொடவத்த, கொழும்பு 10 மற்றும் கொழும்பு 14 பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.*

*திருடப்பட்ட முச்சக்கரவண்டிகள் கோட்டை, கிரிபத்கொடை, வத்தளை மற்றும் பொரளை ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருடப்பட்டமையும் விசாரணையின் போது வெளியாகியுள்ளன.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)*

# கடலூரில் தடையை மீறி ஆர்ப்பாட்டம்: அ.தி.மு.க.வினர் 500 பேர் கைது!



பெண்களுக்கு எதிராக சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வரும் பாலியல் வன கொடுமைகள் கட்டுப்படுத்த தவறியதும், சட்டம்-ஒழுங்கு பாதுகாக்க தவறிய தி.மு.க. அரசை கண்டித்து கடலூர் வடக்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்து நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தனர். மேலும் அ.தி.மு.க. சார்பில் மேடை அமைக்காத வகையில் பொலிஸார் வாகனங்களை நிறுத்தி வைத்து நடவடிக்கை மேற்கொண்டனர். இதனை தொடர்ந்து வாகனத்தை திடீரென்று பொலிஸார் அங்கிருந்து எடுத்து சென்றனர். இதனை தொடர்ந்து வாகனத்தில் பேனர் வைத்துக்கொண்டு முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான எம்.சி.சம்பத் தலைமையில் தலைமை தபால் நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் தொடங்கியது.

அப்போது தி.மு.க. அரசை கண்டித்து முன்னாள் அமைச்சர் எம்.சி.சம்பத் தலைமையில் முன்னாள் அமைச்சர் எம்.சி.தாமோதரன், முன்னாள் எம்.எல்.ஏ. சத்யா பன்னீர்செல்வம், மாவட்ட அவைத்தலைவர் சேவல்குமார், மற்றும் ஏராளமான அ.தி.மு.க.வினர் கண்டன கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் திடீரென்று பொலிஸார் ஒலிவாங்கி இணைப்பை நிறுத்தினர். பின்னர் அ.தி.மு.க.வினர் பொலிஸாரை கண்டித்து கோஷம் எழுப்பிய போது மீண்டும் இணைப்பு கொடுத்தனர். பின்னர் 2-வது முறை இணைப்பை நிறுத்திய போது அ.தி.மு.க.வினர் கோஷத்தை நிறுத்தாமல் தொடர்ந்து ஆக்ரோஷமாக பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு இருந்த பொலிஸார் போராடடத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என கூறி வாகனத்தில் நின்று கொண்டிருந்த முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளையும் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து பொலிஸார் அவர்களை வாகனத்தில் ஏற்றுவதற்கு முயன்ற போது அ.தி.மு.க.வினருக்கும், பொலிஸாருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு இருந்த நிலையில் தள்ளுமுள்ளாக மாறியது. பின்னர் அனைவரையும் வாகனத்தில் ஏற்றி கைது செய்து தனியார் மண்டபத்திற்கு கொண்டு சென்றனர். இதில் 500-க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினரை கைது செய்தனர். குறித்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு போக்குவரத்தும் பாதிப்படைந்தது.



## பரமத்தி வேலூர் அருகே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட 4 கிராம மக்கள்!

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகா இருக்கூர், மாணிக்கநத்தம், கோப்பணம் பாளையம், வீரணம்பாளையம் ஆகிய 4 ஊராட்சிகளின் எல்லையில் பஞ்சபாளையம் பகுதியில் அமைந்துள்ள காலாவதியான கல்குவாரியில் மழை நீர் தேங்கியுள்ளது. இந்த தண்ணீர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள விவசாயத்திற்கும், குடிநீர் தேவைக்கும் நீர் ஆதாரமாக உள்ளது.

இந்நிலையில் இந்த நீர் நிலை தேக்கத்தில் பரமத்தி மற்றும் வேலூர் பேரூராட்சிகளின் சாக்கடை கழிவு நீரை கொண்டு வந்து தேக்கி சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டது.

இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், விவசாயிகள் அப்பணியை தடுத்து நிறுத்த வலியுறுத்தி தொடர்ந்து போராடி வருகின்றனர்.

இந்த நீர்நிலையை சுற்றியுள்ள இருக்கூர், மாணிக்கநத்தம், வீரணம் பாளையம், கோப்பணம் பாளையம் ஆகிய 4 கிராமங்களில் 20-க்கும் மேற்பட்ட ஊர்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் விவசாயத்தையும், கால்நடைகளையும் நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இந்த நீர்நிலையில் சாக்கடை கழிவுநீரை கொண்டு வந்து தேக்கினால் இப்பகுதி நிலத்தடி நீரும், காற்றும் மாசுபடும். மேலும் விவசாய நிலமும் பாதிக்கும்.

எனவே சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதை நிறுத்த வேண்டும் என கூறி மாணிக்கநத்தம், இருக்கூர், கோப்பணம்பாளையம், வீரணம்பாளையம் ஆகிய 4 கிராமங்களை சேர்ந்த சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் பஞ்சபாளையம் மெயின் ரோட்டில் இன்று காலை முதல் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் கவர்னரை சந்தித்த விஜய்!



சென்னை அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாணவி ஒருவருக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் தமிழகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. இதற்கு அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

மேலும் அதிமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகள் சம்பவத்தை கண்டித்தும், திமுக அரசை கண்டித்தும் போராட்டம் நடத்தி வருகின்றன.

இதனை தொடர்ந்து இன்று காலை தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தனது கைப்பட எழுதிய கடிதம் ஒன்றை வெளியிட்டார். அக்கடிதத்தில், எந்த நிலையிலும் நிச்சயமாக உங்களுடன் நான் உறுதியாக துணை நிற்பேன், அண்ணனாகவும், அரணாகவும் என குறிப்பிட்டு இருந்தார்.

அதனைத் தொடர்ந்து, கிண்டியில் உள்ள ராஜ்பவன் மாளிகையில் கவர்னர் ஆர்.என். ரவியை தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் சந்தித்து பேசினார். குறித்த சந்திப்பின் போது அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

கவர்னருடனான சந்திப்பின்போது விஜயுடன், த.வெ.க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் ஆதாயம் தேடுகிறார்– எடப்பாடியை சாடிய அமைச்சர்!

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவருக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை வழக்கில் ஞானசேகரன் குறிப்பிட்ட அந்த நபர் யார்? என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் விதமாக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் கூறியுள்ளதாவது:-


முதலமைச்சராக இருந்தபோது 13 அப்பாவி பொதுமக்களை சுட்டுக் கொன்றதையே டி.வி.யைப் பார்த்து தெரிந்துகொண்ட எடப்பாடி பழனிசாமி இன்னும் திருந்தாமல் பத்திரிகைகளில் வந்த கிசுகிசுவை அடிப்படையாக வைத்து போராட்டம் என்ற பெயரில் மக்களை வதைக்கிறார்.

திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் உயர்கல்வி பயில்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதைச் சிதைக்கும் வகையில் சார் யார்? என்று இல்லாத ஒன்றைக் கேட்டு அரசியல் ஆதாயம் தேடுகிறார்.

இன்று கூட திராவிட மாடல் அரசின் முன்னோடி திட்டமான புதுமைப்பெண் திட்டம் அரசு உதவி பெறும் பாடசாலைகளில் பயின்று முடித்து உயர்கல்வி கற்போருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பாலியல் புகார்களில் பெண்கள் பொலிஸாரிடம் புகார் அளிக்கவே அஞ்சி நடுங்கிய நிலை திராவிட மாடல் ஆட்சியில் மாற்றப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்கள் துணிச்சலாக புகார் தருகிறார்கள்.

அவர்களை மீண்டும் அச்சுறுத்தும் விதமாகத்தான் எடப்பாடி பழனிசாமியின் அறிக்கை அரசியலையும் போராட்ட நாடகத்தையும் மக்கள் பார்க்கிறார்கள் என்று இதன்போது தெரிவித்துள்ளார்.



# பெண்களின் உலகம்!

## எல்லா மாற்றங்களுக்கும் இதுதான் காரணம்

ஒரு பெண்ணை வளைவு நெளிவுகளுடன் பெண்மையாகக் காட்டுவது ஈஸ்ட்ரோஜன் ஹோர்மோன் தான். இதைத் தவிர ஈஸ்ட்ரோஜன் பெண்களுக்கு பல நன்மைகளைச் செய்கிறது. ஒரு பெண்ணின் உடலில் ஈஸ்ட்ரோஜன் சிலநேங்களில் குறையும்.. சில நேரங்களில் அதிகரிக்கும்.. அப்படி நிகழும்போது பெண்கள் உடலில் பல பிரச்சனைகள் ஏற்படும்.

பெண்களின் உடலில் இருக்கிற முக்கியமான செக்ஸ் ஹோர்மோன் இது. 'நான் ஒரு பெண்' என்கிற ஒரு உணர்வை ஏற்படுத்துகிற ஹோர்மோனும் இதுதான். உற்பத்தியாவது சினைப்பையில் இருந்து என்றாலும், 'ஒரு சிறுமியின் வளர் இளம் பருவத்தில் இருந்து நீ அதிகமாக உற்பத்தியாக வேண்டும்' என்று அதற்குக் கட்டளையிடுவது மூளையின் கீழ்ப்பகுதியில் இருக்கிற பிட்யூட்டரி சுரப்பிதான்.

ஈஸ்ட்ரோஜனின் முக்கிய பணிகள், ஒரு சிறுமியை பெண்ணாக மாற்றுவது ஈஸ்ட்ரோஜன்தான். பதின்ம வயதுகளில் இருக்கிற சிறுமிகளின் அக்குள் மற்றும் அந்தரங்கப் பகுதியில் ரோம வளர்ச்சியை ஏற்படுத்தும்.

அதுவரை தட்டையாக இருந்த மார்புகளை கொழுப்புத் திசுக்களால் மெல்ல மெல்லப் பூரிக்க வைக்கும். பெண்களுக்கே உரித்தான மெத்தென்ற சருமத்தைக் கொடுக்கும்.

சினைப்பைகளை வளர்த்து, கரு முட்டையை உருவாக்கி, அதை வளர்த்து, மாதவிடாயாக வெளிப்படுத்தும். இதைத் தான் 'பெரியவளாகி விட்டாள்' நாம் என்று கொண்டாடுகிறோம்.

மாதந்தோறும் மாதவிடாய் ஒழுங்காக வர வேண்டுமென்றாலும் ஈஸ்ட்ரோஜனின் உதவி தேவை. தாம்பத்திய உறவின்போது, அந்தரங்க உறுப்பில் ஈரப்பதத்தை ஏற்படுத்தி உறவு நேரத்தை வலியில்லாமல் வைக்கும்.

கருப்பையைத் தேவையான அளவுக்கு வளர்க்கும். கருப்பையின் உள்ளே இருக்கிற என்டோமெட்ரியம் திசு வளர உதவி செய்யும். இந்த என்டோமெட்ரியம் திசுவில்தான் கருவானது பதிந்து உருவாகும். கருவில் இருக்கிற சிசுவின் மெத்தை இந்த என்டோமெட்ரியம். இந்த மெத்தையை உருவாக்குவது ஈஸ்ட்ரோஜன்.

எலும்புகளை வலுவாக இருக்க வைக்கும். உடலில் வளர்சிதை மாற்றத்தை ஏற்படுத்தும். இந்த வளர்சிதை மாற்றம் நிகழ்ந்தால்தான் உடலில் இருக்கிற கழிவுகள் வெளியேறி, நாம் ஆரோக்கியமாக இருக்க முடியும். உடம்பில் தேவையான கொழுப்புச் சத்தைச் சேமித்து வைக்கும்.

ஈஸ்ட்ரோஜன் குறைந்தால் சிறுமிகள் வயதுக்கு வரத் தாமதமாகும். மார்பக வளர்ச்சி, அக்குள் முடி, அந்தரங்க முடி வளராது. வயதுக்கு வந்த பிறகு குறைந்தால், 3 அல்லது 4 மாதத்துக்கு ஒரு தடவை மாதவிடாய் வரும் திருமணத்துக்குப் பிறகு குறைந்தால் உறவின்போது வலி இருக்கும். நடுவயதின்போது குறைந்தால்,ஆஸ்டியோபோரோசிஸ். என்கிற எலும்புத்தேய்மான பிரச்சனை வரும்.





மெனோபாஸ் நேரத்தில் உடம்பு திடீரென்று சூடாவதற்கும், அடுத்த நொடி உடல் சாதாரண சூட்டுக்கு வந்துவிடுவதற்கும், பிறப்புறுப்பு வறண்டு போய் தாம்பத்திய தருணங்கள் வலி மிகுந்து இருப்பதற்கும் ஈஸ்ட்ரோஜன் குறைபாடுதான் காரணம். ஈஸ்ட்ரோஜன் அதிகமாவது மிகவும் அரிதாக நிகழ்கிற ஒரு விஷயம். சினைப்பையில் புற்றுநோய் வந்தால் ஈஸ்ட்ரோஜன் அதிகமாகச் சுரக்கும். கருத்தடை மாத்திரை சாப்பிடுகிறவர்களுக்கு இந்தப் பிரச்சனை அதிகம் வருகிறது.

நீங்கள் விற்றமின் மாத்திரைகள் சாப்பிடுகிறீர்கள் என்றால், அதன் லேபிளில் ஈஸ்ட்ரோஜன் கலக்கப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள். ஈஸ்ட்ரோஜன் அதிகமானால், உடல் எடை அதிகரிக்கும். மாதவிடாயின்போது ரத்தப் போக்குக் குறையும் அல்லது அதிகரிக்கும்.

குறைவது போலவே ஈஸ்ட்ரோஜன் அதிகமானாலும் பிறப்புறுப்பு வறண்டுபோய், உறவின்போது வலி ஏற்படும்.

ஈஸ்ட்ரோஜன் அளவைப் பரிசோதித்து தெரிந்துகொள்ள முடியும். ஒரு சிறுமி வயதுக்கு வரவில்லை என்றாலோ, அல்லது 6 மாதங்களுக்கு ஒருமுறை மாதவிடாய் வந்தாலோ ஈஸ்ட்ரோஜன் அளவை அதற்கான இரத்தப் பரிசோதனை estradiol (E2) மூலம் தெரிந்துகொள்ளலாம். குழந்தையில்லாமல் இருப்பவர்களுக்கு கருமுட்டை வளர்ச்சி இருக்கிறதா என்று தெரிந்துகொள்ளவும், மெனோபாஸ் வரப்போகிறதா என்று தெரிந்துகொள்ளவும் இந்தப் பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனையை மாதவிடாய் வந்த 2 ஆம் நாளிலிருந்து 5 ஆம் நாளுக்குள் செய்ய வேண்டும்.

ஈஸ்ட்ரோஜன் பற்றாக்குறை ஏற்பட்டால் இதற்கான மருந்து இருக்கிறது. ஆனால், அதை மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் சாப்பிடவே கூடாது. உணவுப் பொருள்களில் சோயாவில் ஈஸ்ட்ரோஜன் அதிகம் இருக்கிறது. ஆனால், அதையும்கூட இரத்தப் பரிசோதனை செய்து, உங்கள் உடம்புக்குத் தேவையான அளவுக்கு மருத்துவரின் ஆலோசனையைக் கேட்டு சாப்பிடுவதே நல்லது.

# MAYDAY அறிவித்த விமானி: 179 பேரை பலிகொண்ட தென் கொரிய விமான விபத்து!




நேற்று ஜஞாயிற்றுக்கிழமைஸ தாய்லாந்திலிருந்து 181 பேரை ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்த ஜெஜ/ ஏர் விமானம் தென் கொரிய விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானது.

தலைநகர் சியோலின் சியோலில் இருந்து தென்மேற்கே சுமார் 288 கிலோமீட்டர்கள் தொலைவில் உள்ள முவான் சர்வதேச விமான நிலையத்தில் அடிப்பகுதி ஒடுபாதையில் தரையிறங்கிய விமானத்தின் என்ஜின்களில் இருந்து புகை கிளம்பியது. ஓடுபாதையில் இருந்து சறுக்கிய விமானம் சுவரில் மோதி தீப்பிடித்து வெடித்தது. இதில் இரண்டு பணிப்பெண்கள் தவிர மீதமிருந்த 179 பேரும் உயிரிழந்தனர்.

பறவை ஒன்று விமானத்தில் இடித்ததே விபத்துக்கான காரணம் என்று அதிகாரிகளிடம் இருந்து பெறப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளிவந்துள்ளது.

எலும்பு முறிவுகளுடன் உயிர் பிழைத்த விமானப் பணிப்பெண் ஒருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதற்கிடையே விபத்து நடந்த விமானத்தின் இருக்கைகள் மற்றும் பொருட்களின் சாமான்களின் துண்டுகள் எரிந்த வால் பகுதியும் ஓடுபாதைக்கு அடுத்துள்ள மைதானத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர்களில் 3 வயது குழந்தை மற்றும் 78 வயது முதியவர்கள் மட்டுமே தாய்லாந்தை சேர்ந்தவர்கள் என்றும் மற்ற 177 பேரும் கொரியர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இந்த விபத்துக்கு ஜிஜ ஏர் விமான நிறுவனம் மன்னிப்பு கேட்டுள்ளது. விபத்துக்கு முழு பொறுப்பேற்பதாக தெரிவித்துள்ளது.

# வீடுகளில் ஜன்னல் வைக்க தடை விதித்த தலிபான் அரசு!



ஆப்கானிஸ்தானில் 2021-ம் ஆண்டு தலிபான் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெண்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. பெண்கள் ஆரம்ப கல்வி கற்கவும், பூங்கா உள்ளிட்ட பொது இடங்களுக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் பெண்கள் பொது இடங்களில் பாடுவதற்கும், கவிதைகள் வாசிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக தற்போது தலிபான் அரசு ஆப்கானிஸ்தானில் பெண்கள் வசிக்கும் பகுதிகளில் வீடுகளில் ஜன்னல் வைக்க தடை விதித்து உத்தரவிட்டு உள்ளது.

சமையல் அறைகளில் , முற்றங்களில் வேலை செய்யும் பெண்களை பார்ப்பது ஆபாசமான செயல்களுக்கு வழி வகுக்கும் என அந்நாட்டு அரசின் செய்தி தொடர்பாளர் ஜபி ஹில்சா முசாஹித் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உள்ள வீடுகளில் ஜன்னல்கள் இருந்தால் அதனை மறைக்கும் விதத்தில் தடுப்புகள் அமைக்க வேண்டும் என்றும், புதிய கட்டிடங்களில் ஜன்னல்கள் இருக்க கூடாது என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புதிதாக கட்டப்படும் கட்டுமான தளங்களை கண்காணிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.



# அறுவை சிகிச்சை செய்து கொண்ட இஸ்ரேல் பிரதமர் குறித்து மருத்துவமனை விளக்கம்!

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு நேற்று நடைபெற்ற அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புரோஸ்டேட் அகற்றும் அறுவை சிகிச்சை செய்து கொண்டு நேதன்யாகு தற்போது நல்ல நிலையில் இருப்பதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

“பிரதமர் மயக்க நிலையில் இருந்து எழுந்து நல்ல நிலையில் உள்ளார். அவர் மீட்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார், வரும் நாட்களில் அவர் கண்காணிப்பில் இருப்பார்” என்று ஹடாசா மருத்துவ மையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை, நேதன்யாகுவுக்கு புரோஸ்டேட் விரிவாக்கத்தால் சிறுநீர் பாதை தொற்று இருப்பது கண்டறியப்பட்டதாக அவரின் அலுவலம் சார்பில் அறிவிக்கப்பட்டது.

முன்னதாக, மார்ச் மாதத்தில், நேதன்யாகு குடலிறக்க அறுவை சிகிச்சை செய்து கொண்டார். கடந்த ஆண்டு ஜூலை மாதம், நேதன்யாகுவின் இதய துடிப்பை சீராக வைத்துக்கொள்ளும்பேஸ்மேக்கரை அவரது உடலில் பொருத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் மறைவு!

*அமெரிக்காவின் முன்னாள் அதிபராக பதவி வகித்தவர் ஜிம்மி கார்ட்டர் தனது 100வது வயதில் இன்று ஜார்ஜியாவில் உள்ள அவரது வீட்டில் காலமானார்.*

*தனது பதவிக் காலத்திற்குப் பின்னர் மற்ற அமெரிக்க ஜனாதிபதிகளை விட நீண்ட காலம் வாழ்ந்தார்.*

*மேலும், கடந்த 2002-ம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை ஜிம்மி கார்ட்டர் வென்றார்.*

*ஜிம்மி கார்ட்டர் 1977 முதல் 1981 வரை அமெரிக்க அதிபராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*



# கிராம உத்தியோகத்தர்கள் போராட்டம்

கொழும்பு, டிச. 30

மட்டக்களப்பு மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்கா சதுக்கத்தில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சில நாட்களுக்கு முன்னர் கோறைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நாசிவன்தீவு பகுதி கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்டதை கண்டித்தும், தாக்கியவர்களை கைது செய்யக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அண்மையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் கிராம உத்தியோகத்தர் ஒருவரும் தாக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் தங்களது கடமைகளை அச்சுறுத்தல் இன்றி மேற்கொள்ள வேண்டியும், தாக்கியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. (ஐ)



## கர்தினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிப்களை வழங்கவில்லை, சமூக ஊடகங்களில் எந்த கிளிப்களையும் வெளியிடவில்லை," என்று அவர் மேலும் கூறினார்.

கர்தினாலை அவமதிக்கும் வகையிலான எந்த ஒலிப்பதிவுகள் தம்மிடம் இருந்தாலும் அவற்றை ஒப்படைக்குமாறு சில யூடியூப் சனல்கள் மற்றும் சில தொலைக்காட்சி சனல்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற இலக்கம் 8 தரங்க மல்வத்த உத்தரவிட்டுள்ளார்.

கர்தினால் மற்றும் தேவாலயத்தை அவமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அருட்தந்தை ஜூட் நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நிலமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், புதிய அரசாங்கத்தின் நியமனமானது தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த அரசியல் பாரம்பரியத்தை உடைத்துள்ளது.

"எனவே, பௌத்த விகாரை மற்றும் தேவாலய அமைப்புகளில் பஸ்நாயக்க நிலமே மற்றும் திவடன நிலமே பதவிகள் இனி ஒரே பரம்பரை அல்லது தலைமுறைகளுக்கு மட்டுப்படுத்தப்படக்கூடாது," என்று அவர் மேலும் கூறினார்.

சம்பத், தேவாலயங்களின் நிதி மேலாண்மை தொடர்பாக ஏராளமான சிக்கல்கள் பதிவாகியுள்ளதால், அவற்றின் வருமானத்தை மதிப்பீடு செய்யுமாறும் அவர் அரசாங்கத்தை மேலும் வலியுறுத்தினார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் இன்று, திங்கட்கழமை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தற்போது பதவியிலுள்ள இராணுவத் தளபதி ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் கடற்படைத் தளபதி அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் நாளை தமது பதவிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## நாட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான தொன் எடையுடைய அரிசி விநியோகம் செய்யப்பட்டதாகவும் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆபத்து ஏற்பட்டால் அதிகாரம் இருந்தாலும் அதிகாரம் இல்லை என்றாலும் உதவுவதற்கு ரணில் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (ஐ)

## கிளப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பரபரப்பு ஏற்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் செய்யப்பட வில்லை என கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர்.

சமூக ஊடகதரங்களுக்கு இணங்குவதற்காக வீடியோவிலுள்ள அனைத்து தகாத வார்த்தைப் பிரயோகங்களும் அகற்றப்பட்டுள்ளன. (ஐ)

## மகிந்தவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி மாளிகை பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் இருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் உள்ள சில இராணுவப் பாதுகாப்பு அரண்கள் பல நீக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே, பாதுகாப்புத் தரப்புகள் விழிப்பாகவே இருக்க வேண்டும்.

ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள் மாறாது என்பார்கள்" என்றார்.

மேலும், ஜனாதிபதி செயலக வீதிகளைத் திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது?" - என்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கேள்வி எழுப்பினார். (ஐ-06)

# மீண்டும் மழையுடனான வானிலை அதிகரிக்கும்

கொழும்பு, டிச. 30

இன்று முதல் அடுத்த சில நாட்களில், நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மழை வீழ்ச்சியில் சிறிதளவு அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் எனவும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் பரவலாக மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றர் அளவில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் காற்றானது அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 30-35 கிலோ மீற்றர் வரை ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை நிலவும்.

இடியுடன் கூடிய மழையுடன் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடுவதுடன், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# வாகன விபத்தில் ஐவர் காயம்

கொழும்பு, டிச. 30

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழுவொன்று பயணித்த, ஜீப் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் கொடகவெல,பலங்கொட,ராகலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த நான்கு பெண்கள் மற்றும் ஒரு ஆண் காயமடைந்து மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், டிக்ஓயா ஆரம்ப வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை அன்று சிவனொளி பாதமலைக்கு யாத்திரை சென்று திங்கட்கிழமை அன்று திரும்பி கொடகலவெலை நோக்கி வந்து கொண்டிருந்த போது நல்லத்தண்ணி - மஸ்கெலியா பிரதான வீதி பிரவுன் தோட்ட பகுதியில் வைத்து இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது ஜீப் வண்டியில் ஏழு பேர் பயணித்ததுள்ளதாகவும் அதில் இருந்த குழந்தையொன்று மற்றும் சாரதி சிறு காயங்களுக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜீப் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமே விபத்திற்கான காரணம் என தெரியவந்துள்ளது. மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)









இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2024 இல் வெளியிடப்பெற்றது.